# பொருளதிகாரம்

தொல்காப்பியத்தில் பொருளதிகாரம்தான் மிக முக்கியமானது. பொருளதிகாரமும் ஏனைய அதிகாரங்களைப்போல் ஒன்பது இயல்களை உடையது. உலகச் செயல்கள் அனைத்திற்கும் அடிப்படையாக அமைவது நிலமும் பொழுதும். அதை முதற்பொருள் என்பார் தொல்காப்பியர். பின்பு கருப்பொருள், உரிப்பொருள் போன்றவற்றையும் அகவாழ்க்கைச் செய்திகளையும் அகத்திணையியல் கூறுகிறது. நாட்டு வாழ்க்கை பற்றிய செய்திகளைப் புறத்திணையியலில் கூறுகிறார். அன்பு வாழ்க்கையின் தொடக்கமாகிய இல்வாழ்க்கை பற்றிக் களவியலிலும், கற்பியலிலும் பேசுவார். பொருளதிகாரத்தின் எச்சஇயல் போன்று அல்லது ஒழிபியல் போன்று பொருளியல் அமைந்துள்ளது.

உலகம் முழுவதும் மெய்ப்பாடு ஒன்றுதான். மனிதர் அழுவது, சிரிப்பது, சினப்பது, மகிழ்வது, பெருமிதம் கொள்ளுவது போன்றவற்றை மெய்ப்பாட்டியல் கூறும்; செய்யுளை அனுபவிப்பதற்கு அவற்றில் அழகுகள் தேவை. அதை அணி





இலக்கணம் என்று கூறுகிறோம். அவற்றின் விதை உவமவியல். அதைக் கூறியபின்பு, இலக்கிய வகைகள், இலக்கியத் திறனாய்வு, இலக்கிய மரபு போன்றவற்றைச் செய்யுளியல் கூறுகிறது. மரபு மனிதத்துக்கு மிகுந்த அடிப்படை ஆகிறது. வாயால் உண்ணல் மரபு; கண்ணால் பார்த்தல் மரபு. வாயால் பார்க்கவோ, கண்ணால் உண்ணவோ முடியாது. அதனால் மரபைப் பின்பற்றவேண்டும் என்பதற்காக மரபியலை இறுதியில் கூறுகிறார்.

# பொருளதிகாரம்

## 19. அகத்திணை இயல்

55 அ

(அகம் - உள்ளம்; தலைவன் தலைவியரின் உள்ளங்கள் இணைந்த ஒழுக்கத்தைக் கூறும் பகுதி; வீட்டு வாழ்க்கையைக் கூறுவது)

### அகப்பொருட்குரிய திணைகள்

947. கைக்கிளைமுதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப.

### நிலம் உடையவை

948. அவற்றுள்
நடுவண் ஐந்திணை நடுவணது ஒழியப்
படுதிரை வையம் பாத்திய பண்பே.

### பொருள்கள் மூன்று

949. முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங்காலை முறைசிறந்தனவே.
பாடலுள் பயின்றவை நாடும் காலை.

### முதல் பொருள்

950. முதல் எனப்படுவது நிலம்பொழுது இரண்டின்
இயல்பு எனமொழிப இயல்பு உணர்ந்தோரே.



கைக்கிளை முதலாகப் பெருந்திணை இறுதியாக முதன்மைபெறுகின்ற ஒழுக்க வகைகள் ஏழு என்று கூறுவர். 1

அவ்வேழில் நடுவில் இருக்கும் குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்ற ஐந்திணைகளுள் நடுவிலிருக்கும் பாலை நீங்கக் கடலால் சூழப்பெற்ற இந்நில உலகத்தைப் பகுத்துக் கொண்டனர். 2

முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என முறையாகச் சொல்லும் நிலையில், இலக்கியத்துள் வழங்கியவற்றைக் கருதி அமைத்துக் கொண்டனர். 3

முதல்பொருள் எனக் கூறப்பெறுவதை, நிலம், பொழுது, என இரண்டின் தன்மை எனக் கூறுவர்; அவற்றின் இயல்பினை நன்கு அறிந்தோர். 4

## நிலம்

951. மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே.

## பொழுது - பெரும்பொழுது - சிறுபொழுது

952. காரும் மாலையும் முல்லை; குறிஞ்சி
கூதிர் யாமம் என்மனார் புலவர்.

953. பனிஎதிர் பருவமும் உரித்தெனமொழிப.

954. வைகறை விடியல் மருதம்; எற்பாடு
நெய்தலாதல் மெய்பெறத் தோன்றும்.

955. நடுவு நிலைத் திணையே நன்பகல் வேனிலொடு
முடிவு நிலை மருங்கின் முன்னிய நெறித்தே.

956. பின்பனி தானும் உரித்தென மொழிப.

957. இருவகைப் பிரிவும் நிலைபெறத் தோன்றினும்
உரியதாகும் என்மனார் புலவர்.



கண்ணன் விரும்புகின்ற காடுடைய முல்லை நிலமும் முருகன் விரும்புகின்ற மேகம் சூழ்ந்த மலையுடைய குறிஞ்சி நிலமும்; இந்திரன் விரும்புகின்ற மிகுதியான நீரையுடைய மருத நிலமும், வருணன் விரும்புகின்ற மிகுதியான மணலையுடைய நெய்தல் நிலமும், என முறையாகச் சொல்லப் பெறும். 5

முல்லைக்குரிய பெரும்பொழுது கார், சிறுபொழுது மாலை; குறிஞ்சிக்குரிய பெரும்பொழுது கூதிர், சிறுபொழுது யாமம் என்பர் அறிவுடையோர். 6

முன்பனி என்ற பெரும்பொழுதும் குறிஞ்சிக்கு உரித்து என்று கூறுவர். 7

மருதத்திற்குரிய சிறுபொழுதுகள் வைகறையும் விடியலும்; நெய்தலுக்குரிய சிறுபொழுது எற்பாடு. 8

பாலைக்குரிய சிறுபொழுது நன்பகல்; பெரும்பொழுது இளவேனில், முதுவேனில் என நிகழ்தலைக் கருதியோர் கூறுவர். 9

பின்பனியும் பாலைக்குரிய பெரும்பொழுதெனக் கூறுவர். 10

பெரும்பொழுது, சிறுபொழுது ஆகிய இருவகைப் பிரிவுகளும் நிலைபெறத் தோன்றும் என்று கூறுவர் அறிவுடையோர். 11

காலத்திற்கு மேலும் ஒரு முடிபு

958. திணை மயக்குறுதலும் கடிநிலை இலவே
நிலன் ஒருங்கு மயங்குதல் இன்றென மொழிப
புலன்நன் குணர்ந்த புலமை யோரே.
முதற்பொருள் கருப்பொருள்கட்கு ஒருவிதி

959. உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே.

உரிப்பொருள்

960. புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிவை
தேருங்காலை திணைக்குரிப்பொருளே.

அவற்றுள் பிரிதலின் வேறுவகை

961. கொண்டுதலைக் கழிதலும், பிரிந்துஅவண் இரங்கலும்
உண்டென மொழிப ஓரிடத் தான.

962. கலந்த பொழுது காட்சியும் அன்ன.

முதற்பொருளின் திட்டம்

963. முதல் எனப்படுவது ஆ இருவகைத்தே.

கருப்பொருள்

964. தெய்வம், உணாவே, மா, மரம்,புள்,பறை,
செய்தி, யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருஎன மொழிப.



திணைக்குரிய ஒழுக்கங்கள் மயங்கி நிகழ்தலும் நீக்கப்பட முடியாத ஒன்று. ஆனால் நிலங்கள் தம்முள் மயங்குதல் இல்லை எனப் பொருள் இலக்கணக் கோட்பாட்டை அறிந்த அறிவுடையோர் கூறுவர். 12

உரிப்பொருள் அல்லாதனவாகிய, முதல் கருப்பொருள்கள் மயங்கி வரலாம். 13

புணர்தலும் புணர்தல் நிமித்தமும், பிரிதலும் பிரிதல் நிமித்தமும், இருத்தலும் இருத்தல் நிமித்தமும், இரங்கலும் இரங்கல் நிமித்தமும், ஊடலும் ஊடல் நிமித்தமும் என இவை அகத்திணைகட்குரிய உரிப்பொருளாகும். 14

தலைவன், தலைவியைத் தன்னுடன் உடன்கொண்டு செல்லுதலும், சுற்றத்தினர் வந்து பிரித்தவழி, பிரிவிற்காகக் கலங்குதலும் சில வேளைகளில் உண்டு எனக் கூறுவர். 15

தலைவன் தலைவி இணைந்தபோதும் உரிப்பொருள் அமையும். 16

முதல்பொருள் எனக் கூறப் பெறுவது நிலம், பொழுது என்ற இருவகையுமாகும். 17

தெய்வம், உணவு, விலங்குகள், மரம்செடி கொடிகள், பறவை, தோற்கருவிகள், தொழில், யாழ் போன்ற நரம்புக் கருவிகள், ஊர், நீர், பூ போன்றனவும் கருப்பொருள் என்று கூறுவர். 18

### கருப்பொருட்கு மேலும் ஒரு முடிபு

965. எந்நில மருங்கின் பூவும் புள்ளும்
அந்நிலம் பொழுதொடு வாரா ஆயினும்
வந்த நிலத்தின் பயத்த வாகும்.

### அவர் பெயரியல்பு

966. பெயரும்வினையும் என்று ஆ இருவகைய;
திணைதொறும் மரீஇய திணைநிலைப் பெயரே.

### முல்லை நிலத்து மக்கள்

967. ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப்பெயர்
ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே.

### ஏனை நிலத்து மக்கள்

968. ஏனோர் பாங்கினும் எண்ணுங் காலை
ஆனா வகைய திணைநிலைப் பெயரே.

### கைக்கிளை, பெருந்திணை, மக்கள்

969. அடியோர் பாங்கினும், வினைவலர் பாங்கினும்
கடிவரை இல புறத்து என்மனார் புலவர்.

970. ஏவல் மரபின் ஏனோரும் உரியர்
ஆகிய நிலைமை அவரும் அன்னர்.

### பிரிவின் வகை

971. ஓதல், பகையே, தூது இவை பிரிவே.



கருப்பொருள்களில் பூவும், பறவைகளும், எந்நிலத்திற்குரியவை எனக் கூறப்பெற்றவை, பிற நிலங்களில் வந்தாலும், அந்நிலத்தின் கருப்பொருளாகவே கொள்ளப் பெறும். 19

ஒவ்வொரு திணைக்கும் மரபு பற்றி வரும் பெயரும், தொழில் பற்றி வரும் பெயரும் எனப் பெயர் இருவகைப்படும். 20

ஆயர், வேட்டுவர் என்பன முல்லைத்திணையின் ஆடவர் பெயர்; அத்திணைத் தலைவராக வரும் கிழமையுடையோரும் உளர். 21

ஏனைய நிலத்து மக்கள் மாட்டும் ஆராயும் காலத்து அவ்விடத்து அவ்வகைத் திணைப்பெயர்கள் உள. உழவர், உழத்தியர்; ஊரன், மகிழ்நன். 22

அடித்தொழில் செய்வார் பக்கத்திலும், குற்றேவல்செய்வார் பக்கத்திலும் அகம் பற்றிய ஒழுகலாறுகள் நீக்கப்படுவன அல்ல எனக் கூறுவர் அறிவுடையோர். 23

ஏவுகின்ற மரபையுடைய வேளிர், தண்டத் தலைவர் போன்றோரும் அகத்திணைக் கிழவராவதற்குரியர். 24

பிரிதலுக்குக் காரணமாக மூன்று அமையும். அவை கற்றல், போர், தூது என்பன. 25

### அவற்றுள் ஓதலும் தூதும்

972. அவற்றுள்
ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன.

### பகைவயிற் பிரிவு

973. தானேசேறலும் தன்னொடு சிவணிய
ஏனோர் சேறலும் வேந்தன் மேற்றே.

### காவல், பொருள்வயிற் பிரிவு.

974. மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய,
முல்லை முதலாச் சொல்லிய முறையால்
பிழைத்தது பிழையாதாகல் வேண்டியும்
இழைத்த ஒண்பொருள் முடியவும் பிரிவே.

### பிரிவு நால்வர்க்கும் உரித்து

975. மேலோர் முறைமை நால்வர்க்கும் உரித்து.

### மன்னரைச் சார்ந்தோர்

976. மன்னர் பாங்கின் பின்னோர் ஆகுப.

### கல்விப் பிரிவு

977. உயர்ந்தோர்க்குரிய ஓத்தினான.

### தூதுப் பிரிவு

978. வேந்துவினை இயற்கை வேந்தன் ஒரீஇய
ஏனோர் மருங்கினும் எய்துஇடன் உடைத்தே.



கற்றலும், தூது செல்வதும் சமுதாயத்தில் உயர்ந்தவர்களான் அமைகின்றன. 26

அரசன் தானே செல்லுதலும், தன்னொடு பொருந்திய தானைத்தலைவர் போன்றோர் சேர்ந்து செல்லுதலும் அரசன் கண்ணது. 27

மேவுகின்ற சிறப்பினையுடைய மக்களை அல்லாத தேவரது பூசையும் விழாவும் முதலாயினவும் முல்லை முதலாகச் சொல்லப் பெற்ற எல்லா நிலங்களிலும் மக்கள் தப்பிய வழி தப்பாது நிறுத்தல் வேண்டியும், (காவல்) செய்யப்பெற்ற பொருளை ஆக்குதற்காகவும் பிரிவு உளதாம். 28

காவற்பிரிவு அரசியலாளர், தலைமக்கள், நிலமக்கள், அடியோர், (வினைவலர்) என நால்வர்க்கும் உரித்து என்க. 29

அரசன் சார்பாகத் தலைமை தாங்கிச் செல்லுதற்கு அரசனுக்கு அடுத்த பெருங்குடிமக்கள். உரியவர். 30

கல்விப் பிரிவு, இருவகையோரினும் உயர்ந்தோராகிய வணிகர்க்கும் உரித்து. 31

வேந்தனுக்குரிய பிரிவாகிய தூதுப்பிரிவு, வேந்தனை நீக்கிய வணிகர், வேளாளர்க்கும் ஆகுமிடம் உடைத்து. 32

## பொருள்வயிற் பிரிவு

979. பொருள்வயின் பிரிதலும் அவர்வயின் உரித்தே
உயர்ந்தோர் பொருள்வயின் ஒழுக்கத்தான.

## பிரிவில் மகளிர் பற்றிய முடிபு

980. முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை.

## மகளிர் பற்றி மற்றொரு முடிபு

981. எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேல்
பொற்புடை நெறிமை இன்மையான.

## நற்றாய் கூற்று

982. தன்னும் அவனும் அவளும் சுட்டி,
மன்னு நிமித்தம், மொழிப்பொருள் தெய்வம்
நன்மை தீமை அச்சம் சார்தல் என்று
அன்ன பிறவும் அவற்றொடு தொகைஇ
முன்னிய காலம் மூன்றுடன் விளக்கித்
தோழி தேஎத்தும் கண்டோர் பாங்கினும்
போகிய திறத்து நற்றாய் புலம்பலும்
ஆகிய கிளவியும் அவ்வழி உரிய.

## செல்லும் இடங்கள்

983. ஏமப்பேரூர்ச் சேரியும் சுரத்தும்
தாமே செல்லும் தாயரும் உளரே.

984. அயலோராயினும் அகற்சி மேற்றே.



பொருள்வயிற் பிரிதலும் நிலத் தலைமக்களுக்கு உரித்து. உயர்ந்தோர் பொருள்வயிற்பிரிதல் அறத்தோடு முறைமையாக அமையும். 33

கடல்வழிப் பயணம் செல்லும்போது பெண்டிரை அழைத்துச் செல்வது இல்லை. 34

எந்த நிலத்திலும் பெண்டிர் மடலேறுதல் இல்லை. அது சிறப்புடைய ஒழுக்கம் இல்லாததால். 35

உடன்போக்கில், தலைவன் தலைவியை அழைத்துச் சென்ற பின்னர், நற்றாய், தன்நிலை பற்றியும் தலைவன் நிலைபற்றியும் தலைவி நிலைபற்றியும் குறிப்பிட்டு, நிமித்தம் பார்த்தல், விரிச்சி கேட்டல், தெய்வத்தை வழிபடல், அவர்க்கு ஏற்படுகின்ற நன்மை தீமை பற்றிச் சிந்தித்தலால் ஏற்படும் அச்சம் அவரைச் சார்தல் போன்றவைகளை, மூன்று காலங்கள் பற்றியும் விளக்கித் தோழியிடமும், கண்டோரிடமும் நற்றாய் கூற்றும், புலம்புதலும் நிகழும் என்க. 36

பாதுகாவலுடைய பேரூர்களுக்கும், அதைச் சேர்ந்திருக்கின்ற சேரிகளுக்கும், காட்டு வழிகளுக்கும் செல்லும் நற்றாய், செவிலித் தாயரும் உளர். 37

மனைக்கு அயலிடத்துச் சென்றோராயினும் அதுவும் பிரிவின்கண்படும். 38

## தோழி கூற்று

985. தலைவரும் விழும நிலை எடுத்துரைப்பினும்,
போக்கற் கண்ணும் விடுத்தற் கண்ணும்,
நீக்கலின் வந்த தம்முறு விழுமமும்,
வாய்மையும் பொய்ம்மையும் கண்டோர்ச் சுட்டித்
தாய்நிலை நோக்கித் தலைப்பெயர்த்துக் கொளினும்.
நோய்மிகப் பெருகித் தன்நெஞ்சு கலுழ்ந்தோளை
அழிந்தது களைஇய ஒழிந்தது கூறி
வன்புறை நெருங்கி வந்ததன் திறத்தோடு
என்றிவை எல்லாம் இயல்புற நாடின்
ஒன்றித் தோன்றும் தோழி மேன.

## கண்டோர் கூற்று

986. பொழுதும் ஆறும் உட்குவரத் தோன்றி
வழுவின் ஆகிய குற்றம் காட்டலும்,
ஊரது சார்வும் செல்லும் தேயமும்
ஆர்வநெஞ்சமொடு செப்பிய வழியினும்,
புணர்ந்தோர் பாங்கின் புணர்ந்த நெஞ்சமொடு
அழிந்தெதிர் கூறி விடுப்பினும், ஆங்குஅத்
தாய்நிலை கண்டு தடுப்பினும் விடுப்பினும்
சேய்நிலைக்கு அகன்றோர் செலவினும் வரவினும்
கண்டோர் மொழிதல் கண்டது என்ப.



1. வருகின்ற துன்பநிலையை எடுத்துக்கூறும் போதும் 2. தலைவனுடன் தலைவியை உடன்போக்கில் போக்குமிடத்தும் 3. தலைவனைப் பொருள்பிரிவு போன்றவற்றிற்கு விடுக்கும் போதும் 4. உடன் போக்கில் இருவரையும் அனுப்பும்போது வழியில் ஏற்படும் துன்பங்களைப் பற்றிப் பேசும்போதும் 5. நற்றாய் செவிலித்தாயர், கண்டோர் கூறிய வாய்மை, பொய்மையான செய்திகளைக் கேட்டு அவர்கள் உற்ற துயரை நீக்குமிடத்தும் 6. பிரிவு காரணமாக நோய் மிகப்பெருகி வருந்தி இருக்தம் தலைவியை, போனதை மறந்துவிட்டு, கடந்ததைக் கூறி தலைவன் அன்பை வற்புறுத்தும் போதும், இவ்வாறு பலநிலைகளில் தோழி கூற்றுக்கள் அமையும். 39

1. செல்லுங்காலமும், வழியும், அஞ்சத்தக்கன வாயுள்ள குற்றங்களையும் செய்திகளையும் காட்டல் 2. அருகிருக்கும் ஊர் பற்றியும் தலைமக்கள் செல்லும் இடம்பற்றியும் ஆர்வமுடன் கூறியபோதும் 3. இணைந்த தலைமக்களுடன் மிகுந்த அன்புடன் தம்மிடத்துத் தங்கச் செய்து விடுக்கும்போதும் 4. தலைமகளைத் தேடிவந்த தாய் நிலையை உணர்ந்து தடுத்து, பின்விடுக்கும்போதும் 5. மிகத்தூரமான இடத்திற்குச் சென்ற தலைமக்கள் செல்லும்போதும் வரும்போதும் கண்டோர் கூற்றுக்கள் அமையும் என்பர். 40

## தலைமகன் கூற்று

987. ஒன்றாத் தமரினும், பருவத்தும், சுரத்தும்
ஒன்றிய தோழியொடு வலிப்பினும் விடுப்பினும்
இடைச்சுர மருங்கின் அவள்தமர் எய்திக்
கடைக்கொண்டு பெயர்த்தலில் கலங்கு அஞர் எய்திக்
கற்பொடு புணர்ந்த கௌவை உளப்பட
அப்பாற் பட்ட ஒரு திறத்தானும்,
நாளது சின்மையும் இளமையது அருமையும்
தாளாண்பக்கமும் தகுதியது அமைதியும்
இன்மையது இளிவும் உடைமையது உயர்ச்சியும்
அன்பினது அகலமும் அகற்சியது அருமையும்
ஒன்றாப் பொருள்வயின் ஊக்கிய பாலினும்
வாயினும் கையினும் வகுத்த பக்கமோடு
ஊதியம் கருதிய ஒருதிறத்தானும்
புகழும் மானமும் எடுத்து வற்புறுத்தலும்
தூது இடையிட்ட வகையினானும்
ஆகித்தோன்றும் பாங்கோர் பாங்கினும்
மூன்றன் பகுதியும் மண்டிலத் தருமையும்
தோன்றல் சான்ற மாற்றோர் மேன்மையும்
பாசறைப் புலம்பலும் முடிந்த காலத்துப்
பாகனொடு விரும்பிய வினைத்திற வகையினும்
காவற்பாங்கின் ஆங்கோர் பக்கமும்
பரத்தையின் அகற்சியின் பரிந்தோள் குறுகி
இரத்தலும் தெளித்தலும் என இருவகையொடு
உரைத்திற நாட்டம் கிழவோன் மேன.



1. சுற்றத்தார் வரைவு உடன்படாத இடத்தும், 2. உடன்போக்கிற்குப் பருவம் பொருந்தாத இடத்தும், 3. காட்டுவழிப் பாதையினும், 4. கருத்திற்கு ஒன்றிய தோழி உடன்போக்கினைத் துணியுமிடத்தும் 5. தோழி பாதுகாப்புச் சொல்லிவிடுக்குமிடத்தும் 6. காட்டுவழி இடைப்பாதையில் தலைவியின் தமர் எய்தி, அவளைத் திரும்ப அழைத்துச் செல்லுமிடத்துத் தலைவி கலங்கித் துன்புறும்போது எழும் அலர் காரணமாகவும் 7. வாழும் நாள்சில என்பதைக் கூறி, இளமையின் அருமையைக் கூறி, முயற்சியின் சிறப்பைச் சொல்லி, தகுதியது அமைதியும் பொருள் இன்மையின் இளிவையும், பொருள் உடைமையின் உயர்ச்சியையும், அன்பினது பெருக்கத்தையும், பிரிவினது அருமையையும் கூறி, பொருள் ஈட்டச் செல்லப் பிரியும் காலத்தும் 8. வாயானும் கையானும் எய்தும் ஊதியம் கருதிய போதும் 9. புகழையும் பெருமையையும் எடுத்து வற்புறுத்தித் தூதுக்காகப் பிரியுங்காலத்தும் 10 தன்பக்கத்தார்க்கு உதவும் பொருட்டுத் துணைவயிற் பிரிவின் கண்ணும் 11. தானை, யானை, குதிரை என்ற மூன்றன் பகுதியும் அரண் நிலப்பெருமையும் பகைவரின் மேன்மை பற்றிப் பேசும்போதும் 12. போர்ப்பாசறையில் தனித்துப் புலம்பும்போதும் 13. போர்முடிந்தபோது பாகனொடு திரும்ப விரைவுபடுத்தும்போதும் 14. காத்தல் கடமைக்குப் பிரியும் போதும் 15. பரத்தையர் பிரிவால் ஏற்பட்ட ஊடலை நீக்கத் தலைவியை இரக்கும்போதும், தெளிவுபடுத்தும்போதும் ஆகிய இருவகை நிலையிலும் தலைவன் கூற்றுக்கள் அமையும் என்க.

மற்றவர்

988. எஞ்சியோர்க்கும் எஞ்சுதல் இலவே.

பிரிவைப் பற்றிய பிற குறிப்புக்கள்

989. நிகழ்ந்தது நினைத்தற்கு ஏதுவும் ஆகும்.

நிகழ்ந்ததைக் கூறல்

990. நிகழ்ந்தது கூறிநிலையலும் திணையே.

கூற்றுள் பொருள் விரவல்

991. மரபுநிலை திரியா மாட்சியஆகி
விரவும் பொருளும் விரவும் என்ப.

உவமையின் வகை

992. உள்ளுறை உவமம் ஏனை உவமம்எனத்
தள்ளாதாகும் திணைஉணர் வகையே.

உள்ளுறை உவமம்

993. உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலன்எனக்
கொள்ளும் என்ப குறியறிந்தோரே.

அதன் இலக்கணம்

994. உள்ளுறுத்து இதனோடு ஒத்துப்பொருள் முடிகஎன
உள்ளுறுத்து இறுவதை உள்ளுறை உவமம்.



எஞ்சிய அகத்திணை மாந்தர்க்கும் கூற்றுக்கள் இல்லாமல் இல்லை. உண்டு என்பதாம். 42

முன்பு நிகழ்ந்ததைப் பின்பு நினைத்தற்குக் காரணங்களும் அமையும். 43

நிகழ்ந்ததை எடுத்துக்காட்டிப் பேசி நிற்பதும் பாலைத்திணைக்குரியதாகும். 44

அகத்திணை மரபுகள் திரியாத நிலையில் அதற்குச் சிறப்புத்தரும் நிலையில் மாந்தர் கூற்றுள் பொருள்கள் விரவி வருதலும் உண்டு என்பர். 45

உள்ளுறை உவமமும், ஏனைய பொது உவமங்களும், திணையை உணர்ந்துகொள்வதற்கு நீக்கமுடியாதவைகளாகும். 46

உள்ளுறை உவமம், கருப்பொருள்களில் தெய்வம் நீங்கலாக, ஏனைய பொருள்களை இடமாகக் கொள்ளும் என்பர் அதன் இலக்கணம் அறிந்தோர். 47

உள்ளுறை உவமமாவது, உள்ளுறுத்த பொருள் இதனோடு ஒத்து முடிக என உள்ளுறுத்து உரைப்பது. 48

### உவமம்

995. ஏனை உவமம் தான்உணர் வகைத்தே.

### கைக்கிளை

996. காமஞ்சாலா இளமையோள்வயின்
ஏமம் சாலா இடும்பைஎய்தி
நன்மையும் தீமையும் என்றுஇரு திறத்தால்
தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்துச்
சொல்எதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்
புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே.

### பெருந்திணை

997. ஏறிய மடல்திறம் இளமை தீர்திறம்
தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்
மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்
செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே.

### கைக்கிளைக்கு மேலும் ஒரு முடிபு

998. முன்னைய நான்கும் முன்னதற்கென்ப.



ஏனைய உவமம் வெளிப்படையாக இது பொருள் இது உவமம் எனத் தானே உணர்த்தும் வகை. 49

காமம் அமையாத இளையாள் மாட்டு, பெருமையில்லாத துன்பம் எய்தி, புகழ்தலும் பழித்தலுமாகிய இருதிறத்தால் தனக்கும் அவளுக்கும் ஒத்தனவாகிய சொற்களைச் சொல்லி, அவளிடமிருந்து பதில் பெறாதவனாய்த் தான் மட்டும் இன்புறுவானாய்ப் பொருந்தித் தோன்றும் கைக்கிளையின் குறிப்பு. 50

1. மடலேறுகின்ற நிலையும் 2. இருவருக்கும் இளமை தீர்ந்த நிலையும் 3. அமைதிப்படுத்த இயலாத காமத்து மிகுந்த நிலையும் 4. மிக்க காமத்தால் வலிமையுடன் சேர விரும்பும் நிலையும் என்ற நான்கும் பெருந்திணைக் குறிப்பாகும். 51

மேல், பெருந்திணைக்குக் குறிப்பிட்ட நான்கும், கைக்கிளைக்கும் பொருட்குறிப்பாகும் என்பர். 52

## அகத்திணைக்குரிய செய்யுட்கள்

999. நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட்டு ஆயிரு பாங்கினும்
உரியதாகும் என்மனார் புலவர்.

## அகத்திணைப் பாடல்களில் இயற்பெயர் வராமை

1000. மக்கள் நுதலிய அகன்ஐந்திணையும்
சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறாஅர்.

## அப்பெயர் வருவதற்குரிய இடம்

1001. புறத்திணை மருங்கின் பொருந்தின் அல்லது
அகத்திணை மருங்கின் அளவுதல் இலவே.



புனைந்துரை வகையானும், உலகியல் வழக்கானும், பாடல் சான்ற இலக்கண மரபான் அமைந்த ஒழுகலாறுகள், கலிப்பா, பரிபாட்டு என்னும் அவ்விரு பாக்களானும் கூறுவதற்குரியவாகும் எனக் கூறுவர் அறிவுடையோர். 53

மக்களின் ஒழுகலாறுகளைக் கூறும் அகன் ஐந்திணைப் பாடல்களில் இயற்பெயர் சுட்டி, ஒருவரும் தம் பெயரைக் கொள்ளப் பெறாஅர். 54

புறத்திணைப் பகுதிகளில் இயற்பெயர்கள் பொருந்தி வருமே அல்லாமல் அகத்திணைப் பகுதிகளில் வருதல் இல்லை. 55